இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

வீழ்வது நாமாக இருப்பினும் வாழ்வது தமிழாக இருக்கட்டும்

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 84 – ஒலி : 61 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – புரட்டாசி 25 – சனிக்கிழமை 11 அக்டோபர் 2025 – கோவை ★★ 12 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 84 - Issue 61: Thiruvalluvar Year - 2056 - Purataasi 25 - Saturday 11 October 2025 - Kovai ★★ 12 Pages ₹ 5.00


## ரூ.100 கோடி ஒதுக்கீட்டில் ‘இணை உருவாக்க நிதியம்’ தொடக்கம்!

# நாட்டின் புத்தொழில் மையமாகத் தமிழ்நாட்டை கட்டமைப்போம்!

## கோவையில் ‘உலக புத்தொழில் மாநாட்டை’ தொடங்கி வைத்து – முதல்வர் மு.க.ஸ்டாலின் நம்பிக்கை!

**கோவை, அக். 11 -**

**“நாட்டின் புத்தொழில் மையமாகத் தமிழ்நாட்டை கட்டமைப்போம்” என்று கோவையில் உலக புத்தொழில் மாநாட்டை தொடங்கி வைத்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றும் போது நம்பிக்கை தெரிவித்தார். மேலும் மாநிலத்தின் புத்தொழில் சூழலை வலுப்படுத்தும் விதமாக 100 கோடி ரூபாய் ஒதுக்கீட்டில், “இணை உருவாக்க நிதியம்” தொடங்கப்படும் எனவும் கூறினார்.**

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (9.10.2025) கோயம்புத்தூர், கொடிசியா வளாகத்தில், தமிழ்நாடு புத்தொழில் மற்றும் புத்தாக்க இயக்கத்தின் “உலக புத்தொழில் மாநாடு 2025” தொடங்கி வைத்து, ஆற்றிய உரை வருமாறு :-

முதலில், இந்த உலக புத்தொழில் மாநாட்டை மிகச் சிறப்பாக ஏற்பாடு செய்திருக்கின்ற இந்தத் துறையின் அமைச்சர் அன்பரசன் அவர்களையும், செயலாளர் அதுல் ஆனந்த், அவர்களையும், இயக்க இயக்குநர் சிவராஜா அவர்களுக்கும் என்னுடைய பாராட்டுக்களையும், வாழ்த்துகளையும் நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அமைச்சர் அன்பரசன் அவர்கள், நம்முடைய அரசுக்கு சிறு, குறு தொழிலுக்கு சிறந்த அரசு எனப் பெயர் வாங்கிக் கொடுத்துள்ளார். இங்கே பேசிய சங்கர் வானவராயர் சொன்னதுபோல, இந்த மாநாடு கோவையில் நடப்பது மிக மிக பொருத்தமானது.

இதுபோன்ற தொழில் மாநாடுகள், தமிழ்நாட்டின் தொழில் துறை வளர்ச்சியை மட்டும் அல்லாமல்; மாநிலத்தின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கும் சான்றாக அமைந்திருக்கிறது!

தொழில் வளருகிறது என்றால், அந்த நிறுவனம் மூலமாக மாநிலம் வளருகிறது. வேலை வாய்ப்புகள் மூலமாக குடும்பங்களும் வளருகிறது; வாழுகிறது! அந்த வகையில், வளர்ச்சியின் அடையாளமாகத் தொழில் நிறுவனங்கள் இருக்கிறது.

### இலக்கை அடைய முனைப்புடன் செயலாற்றுவோம்!

அமைதியான, சட்டம் ஒழுங்கு சிறப்பாக இருக்கின்ற மாநிலத்தைத் தேடித்தான் தொழில் துறையினர் வருவார்கள். தமிழ்நாட்டில், நிம்மதியாக தொழில் நிறுவனத்தை நடத்தலாம் என்ற நம்பிக்கையின் அடையாளமாகதான் இதுபோன்ற மாநாடுகள் நடைபெறுகிறது.




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (9.10.2025) குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறையைச் சார்ந்த தமிழ்நாடு புத்தொழில் மற்றும் புத்தாக்க இயக்கத்தின் சார்பில், கோயம்புத்தூர், கொடிசியா வர்த்தக வளாகத்தில் “உலக புத்தொழில் மாநாடு 2025”யைத் தொடங்கி வைத்து, “Highlights of Startup Vision Report 2035 for Tamil Nadu” அறிக்கையை வெளியிட்டார். இம்மாநாட்டில், அமைச்சர்கள் எ.வ. வேலு, சு. முத்துசாமி, தா.மோ.அன்பரசன், மு.பெ. சாமிநாதன், முனைவர் டி.ஆர்.பி. ராஜா, உகாண்டா நாட்டின் அறிவியல், தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்க துறை அமைச்சர் திருமதி மோனிகா முசெனெரோ மசன்சா, சுவிஸ் நாடாளுமன்றத்தின் உறுப்பினர் டாக்டர் நிக்கலஸ் சாமுவேல் குகர், நாடாளுமன்ற உறுப்பினர்கள் கணபதி பி. ராஜ்குமார், கே. ஈஸ்வரசாமி, சட்டமன்ற உறுப்பினர் வி. செந்தில்பாலாஜி, துபாய் சிலிகான் ஓயாசிஸ் மூத்த துணைத் தலைவர் கானிம் அல்பலாசி, ஒன்றிய அரசின் மின்துறை, தகவல் தொழில்நுட்பத் துறை செயலாளர் கிருஷ்ணன், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல் ஆனந்த், கோயமுத்தூர் மாவட்ட ஆட்சித் தலைவர் பவன்குமார் க. கிரியப்பனவர், ஆசியா பெர்லின் தலைமை நிர்வாக அலுவலர் மார்டன் ராசன்பெர்க் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

நாங்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற இந்த நான்கரை ஆண்டுகளில், எண்ணற்ற தொழில் திட்டங்களை நம்முடைய தமிழ்நாடு ஈர்த்திருக்கிறது. அதிக முதலீடுகளை ஈர்க்கக்கூடிய உயர் தொழில்நுட்பம் வாய்ந்த தொழில்களையும், அதிக எண்ணிக்கையிலான வேலைவாய்ப்புகளை உருவாக்கக்கூடிய தொழில்களையும் ஈர்த்திருக்கிறோம். அதன் மூலமாக, 2030ஆம் ஆண்டுக்குள் தமிழ்நாட்டை 1 டிரில்லியன் டாலர் பொருளாதாரமாக மாற்ற வேண்டும் என்கின்ற இலக்கை அடைவதற்காக நம்முடைய அரசு முனைப்புடன் செயலாற்றிக் கொண்டிருக்கிறது.

பெரிய தொழில்கள் மட்டுமல்ல, MSME தொழில்களும் இதில் முக்கியப் பங்காற்றுகிறது. அதே போல, புதிய, புதிய புத்தாக்கத் தொழில்களும் இதில் முக்கியப் பங்காற்றுகிறது. புதிய சிந்தனைகள், புதிய முயற்சிகள் தொழில் துறைக்குள் வரவேண்டும். அதற்கான முயற்சிகளையும், ஊக்குவிப்பையும் நம்முடைய அரசு தொடர்ந்து செய்து கொண்டிருக்கிறது.

தொழில்துறையைப் பொறுத்தவரைக்கும், நம்முடைய திராவிட மாடல் அரசின் இலக்கு என்னவென்றால், தமிழ்நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும், புத்தொழில் சார்ந்த விழிப்புணர்வு பரவவேண்டும்!

### புத்தொழில் சார்ந்த விழிப்புணர்வு!

பெண்கள், இளைஞர்கள், விளிம்புநிலை மக்கள், மாற்றுத்திறனாளிகள், திருநங்கையர் என்று அனைத்துத் தரப்பு மக்களுக்கும், அரசின் புதுயுக தொழில்முனைவு சார்ந்த திட்டங்கள் சென்றடைய வேண்டும்! அதற்காக, பல முற்போக்கு திட்டங்களை தொடர்ந்து செயல்படுத்திக் கொண்டிருக்கிறோம்.

உலகின் தலைசிறந்த புத்தொழில் மையமாக தமிழ்நாட்டை கட்டமைப்பதுதான் திராவிட மாடல் அரசின் மாபெரும் கனவு. அந்த பயணத்தில், ஒரு முக்கிய மைல்கல்லாக இந்த உலகப் புத்தொழில் மாநாடு ஒருங்கிணைக்கப்பட்டு இருக்கிறது.

ஸ்டார்ட்அப் வளர்ச்சி குறித்த விவாதங்கள், பெரும்பாலும் பில்லியன் டாலர் மதிப்பீடுகள், பெரிய அளவிலான முதலீடுகள் என்பதை மையமாக கொண்டுதான் இருக்கிறது. ஆனால், தமிழ்நாட்டைப் பொறுத்தவரை, புத்தாக்கம் மற்றும் புத்தொழில் சார்ந்த வாய்ப்புகள், எல்லோருக்கும் சென்றடைய வேண்டும் என்று திட்டமிடுகிறோம். குறிப்பாக, பின்தங்கிய நிலையில், விளிம்பு நிலையில் இருக்கின்ற மக்களுக்கும் சென்று சேரவேண்டும் என்பதில் கவனமாக இருக்கிறோம்.

### புத்தொழிலிலும் சமநீதி கடைப்பிடிப்பு!

புத்தொழில் கொள்கையிலும் சமூகநீதி! அது தான், திராவிட மாடல் பாலிசி! இப்படி, நாம் எடுத்துக்கொண்டு வருகின்ற தொடர் முயற்சிகளால், தமிழ்நாட்டின் புத்தொழில் சூழலில், குறிப்பிடத்தகுந்த மாற்றங்களை நிகழ்த்திக் காட்டியிருக்கிறோம்.

கடந்த 4 ஆண்டுகளில், அதற்கு முன்னால் இருந்ததை விட, ஆறு மடங்கு புத்தொழில் நிறுவனங்கள் ஒன்றிய அரசின் தளத்தில் புதிதாக பதிவு செய்யப்பட்டிருக்கிறது. நம்பரில் சொல்ல வேண்டும் என்றால், 2 ஆயிரத்து 32ஆக இருந்த எண்ணிக்கை, இப்போது 12 ஆயிரத்தையும் தாண்டி உயர்ந்திருக்கிறது. இதில், எனக்கு பர்சனலா மகிழ்ச்சியான செய்தி என்ன தெரியுமா? இந்த 12 ஆயிரத்தில் சரிபாதி நிறுவனங்கள் பெண்கள் தலைமையேற்று நடத்துகின்ற நிறுவனங்கள் என்பதுதான்!

### முதலிடம் வந்துள்ள தமிழ்நாடு!

- சிறந்த புத்தொழில் கட்டமைப்பு கொண்ட மாநிலங்களின் தரவரிசைப் பட்டியலில், 2018ஆம் ஆண்டு கடைசி நிலையில் இருந்த தமிழ்நாடு, நான்கே ஆண்டுகளில், 2022ஆம் ஆண்டு முதல் இடத்திற்கு உயர்ந்திருக்கிறது.
- “ஸ்டார்ட்அப் ஜீனோம்” அமைப்பு வெளியிட்ட “உலகளாவிய புத்தொழில் சூழமைவு அறிக்கை 2024”ன்படி, ஆசிய அளவிலேயே 18 ஆவது இடத்தில் சென்னை இருக்கிறது.
- நிதி ஆயோக்கின்கீழ் செயல்படும் ‘அடல் இன்னோவேஷன் மிஷன்’ அமைப்பானது புத்தாக்க சூழமைவு சிறப்பாக இருக்க மாநிலங்களில் முன்மாதிரி மாநிலமாக தமிழ்நாட்டை அங்கீகரித்திருக்கிறது.
- “அவுட்லுக் பிசினஸ்” இதழ் வெளியிட்ட 2024ஆம் ஆண்டுக்கான புத்தொழில் சூழமைவில் சிறப்பாக செயல்படுகின்ற மாநிலங்கள் வரிசையில் நாட்டிலேயே முதல் மூன்று மாநிலங்களில் தமிழ்நாடு இடம் பிடித்திருக்கிறது.
- சமீப காலமாக, தமிழ்நாட்டில் உள்ள புத்தொழில் நிறுவனங்களின் முதலீடு திரட்டும் திறனும் உயர்ந்து வருகிறது. 2016ஆம் ஆண்டு 1 மில்லியன் டாலராக இருந்தது. 2024ஆம் ஆண்டு, 6 மில்லியன் டாலராக அது உயர்ந்திருக்கிறது என்று ‘இன்க் 42’ அறிக்கை தெரிவிக்கிறது. இது, தமிழ்நாட்டில் உள்ள புத்தொழில் நிறுவனங்கள் மீது முதலீட்டாளர்கள் வைத்திருக்கின்ற நம்பிக்கையை வெளிப்படுத்துகிறது.


தொடர்ச்சி 3ஆம் பக்கம்


## திராவிட இயக்கக் கொள்கைச் சிங்கம்

# முரசொலி செல்வம் முதலாமாண்டு நினைவு நாள்!

## திருவுருவப் படத்திற்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் மலரஞ்சலி செலுத்தினார் !

**சென்னை, அக்.11-**

**திராவிட இயக்கக் கொள்கைச் சிங்கம் முரசொலி செல்வம் அவர்களின் முதலாமாண்டு நினைவு நாள் (10.10.2025) நேற்று!**

**இந்நாளையொட்டி கழகத் தலைவர் – முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள், நேற்று பெங்களூர் சென்றார். பெங்களூரில் உள்ள முரசொலி செல்வம் அவர்களின் இல்லத்தில் வைக்கப்பட்டிருந்த அவரது திருவுருவப் படத்திற்கு மலரஞ்சலி செலுத்தினார்.**

**சென்னையில் – ‘முரசொலி’ வளாகத்தில் உள்ள முரசொலி செல்வம் அவர்களின் திருவுருவச் சிலைக்கு, கழகப் பொதுச் செயலாளர் துரைமுருகன், பொருளாளர் டி.ஆர்.பாலு, துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின், கழக துணைப் பொதுச் செயலாளர் ஆ.இராசா எம்.பி., தயாநிதி மாறன் எம்.பி.,அமைச்சர் மா.சுப்பிரமணியன் மற்றும் மாவட்டச் செயலாளர்கள், கழக முன்னணியினர், ஆயிரத்துக்கும் மேற்பட்ட கழகத் தோழர்கள் மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள்.**

பேரறிஞர் அண்ணாவின் அன்பில் திளைத்தவர், முத்தமிழறிஞர் கலைஞரின் நெஞ்சில் நீங்கா இடம் பிடித்தவர், முதல்வர் – கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு உற்ற துணையாக பக்க பலமாக இருந்தவர். எல்லாவற்றிற்கும் மேலாக கழகத்தின் கேடயமாகத் திகழ்ந்தவர் மறைந்த முரசொலி செல்வம் அவர்கள்.



கடந்த ஆண்டு இதே நாளில் திடீரென இவ்வுலகை விட்டு அவர் நீங்கியபோது, கதறியழாத கழக உள்ளங்களே இல்லை. அவர் பயன்படுத்திய பேனா மட்டுமல்ல அவரது எழுத்துக்களை சுவாசித்த அத்துணை நல் உள்ளங்களும் சொல்லொணா துயரில் ஆழ்ந்தன எனில் அது மிகையல்ல.

### ‘முரசொலி’யின் 35 ஆண்டுகால ஆசிரியர்!

முத்தமிழறிஞர் கலைஞரின் மூத்த பிள்ளையான ‘முரசொலி’யின் பணிகளைத் தன் தோளில் சுமந்துகொண்டு இளமைப் பருவம் முதலே திறம்படச் செயலாற்றியவர்.

தலைசிறந்த எழுத்தாளர் – பத்திரிகையாளர் – நூலாசிரியரான இவர், பத்திரிகைச் சுதந்திரத்தைப் பாதுகாத்த கருத்துரிமைப் போராளி.

கழகத்தின் போர்வாளான ‘முரசொலி’ நாளேட்டில் 35 ஆண்டுகளுக்கும் மேலாக ஆசிரியராகப் பொறுப்பேற்று தன் எழுத்துகளால் ஜனநாயகக் குரலாக ஒலித்தவர்.

### கூண்டிலேறி கருத்துரைத்தவர்!

அடக்குமுறைக்கு அஞ்சாமல் சட்டமன்றத்தில் கூண்டிலேறி கருத்துரைத்தவர். தேர்தல் களம் முதல் திரைப்படப் பணிகள் வரை அனைத்துத் துறைகளிலும் முத்திரையைப் பதித்தவர். எந்த நிலையிலும் கழகமே மூச்சு என வாழ்ந்த ஆழமான கொள்கைவாதி.



**‘முரசொலி’ வளாகத்தில் முரசொலி செல்வம் அவர்களின் திருவுருவச்சிலை!**

‘சிலந்தி’ என்ற பெயரில் முரசொலியில் அவர் எழுதிய நையாண்டியும் நகைச் சுவையும் ததும்பும் கட்டுரைகள் கழகத்தின் இளைய தலைமுறையினருக்குக் கொள்கை இரத்தம் பாய்ச்சும் வலிமை கொண்டவை. தன் இறுதிமூச்சு நிற்கும் வரை முரசொலியில் கட்டுரை எழுதியவர்.

முரசொலியில் தன்னுடைய கட்டுரைகளைப் போலவே திராவிட இயக்கத்தின் இளைய எழுத்தாளர்களுடைய கட்டுரைகளைத் தொடர்ந்து பதிவு செய்து ஊக்குவித்தவர் அவர். தொலைக்காட்சி விவாதங்களில், சமூக வலை தளங்களில் கருத்துரைப்போரைத் தேடிக் கண்டறிந்து இயக்கத்தின் படைக்கலனாக மாற்றியவர்.

### பண்பின் திருவுருவம்!

“சிறுவயது முதலே எனக்கு அண்ணனாக – வழிகாட்டியாக, இயக்கப் பணிகளில் ஆலோசனைகள் வழங்கி, நெருக்கடி நேரங்களில் தெளிவான தீர்வுகளை முன்வைத்து, கழகத்துடனான என் வளர்ச்சியில் தோளோடு தோள் நின்றவர். மிச்சமிருந்த தோளை நான் இழந்தேன். கழகத்தின் கொள்கைத் தூண் ஒன்றை நாம் இழந்தோம். “போய்விட்டீர்களே.. போர்முரசே.. திராவிட முரசொலித்த முரசொலி செல்வமே.. பண்பின் திருவுருவமே… திராவிட இயக்கத்தின் படைக்கலனே… கழகத்தின் கொள்கைச் செல்வமே.. நெஞ்சிலும் நினைவிலும் என்றும் நிலைத்திருப்பீர்!” என கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தனது இரங்கலில் குறிப்பிட்டிருந்தது நினைவு கூரத்தக்கது.